கடந்த மாத பதிவுகள்

# தேனீ இணையத்தளம்

www.Thenee.com / www.Theneeweb.de Email: Thenee41@hotmail.com / Theneeweb@yahoo.de

Online Newspaper in Tamil Vol.10 22.07.2011

தேனீ இணையத்தளம் 10வது வருடம் 22.02 2002- 22.02.2011

முதற்பக்கம்
அதிரடி
ஆனந்தசங்கரி
ஈ.பி.ஆர்.எல்.எப்
ஈ.பி.டி.பி
ஈரஅனல்
உதயம்
கவிமலர்
தாயகம்
புளொட்
தூ
நெருப்பு
டெலோ நியூஸ்
பி.ஈ.ஓ.ரி.சுவிஸ்
இலங்கைநெற்
மீன்மகள்
இலக்கு
சுத்திரம்
மகாவலி
உண்மைகள்
தேனகம்
அம்மான்
தமிழ்நியூஸ்வெப்
அறிவுடன்
திருத்தியம்
பெண்ணியம்
புதியபாதை
அலை
பூர்வீகம்
பூந்தளிர்
கண்ணோட்டம்
எங்கள்தேசம்
சலசலப்பு
நோயல்நடேசன்
விடிவெள்ளி
எங்கள்பூமி
ரீவடை
இணையம்
பார்வை
தமிழ்யுகே
புயல்
புளொட்யுகே
யாழ்முஸ்லீம்
புண்ணியாமீன்
யவனா
ருடே
எஸ்.ஆர்.லெம்பட்
பஷீர்
தமிழ்யூஎன்
கவசங்களைதல்
தூங்காத கண்கள்

Asientribune
Lines-Magahzine
The lka academic
Tamil Week sldf
Uthr

## புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோழர் மணியம் எழுதும் அனுபவத்தொடர் - 6

### 6. சிங்களப் பொலிஸ் கைதிகளின் பிரார்த்தனை ஒலி கேட்டேன்!



என்னை அந்த அறைக்குள் தள்ளிய புலி உறுப்பினன், உள்ளே இருந்தவர்களை நோக்கி, "டேய் வாற ஆளிட்டை ஏதாவது அப்புக்காத்து வேலை பாத்தியளோ, முதுகு முறியும்" என எச்சரித்துவிட்டு, கதவைக் வேகமாகப் பூட்டிவிட்டுச் சென்றுவிட்டான்.

அந்தச் சின்னஞ்சிறிய அறைக்குள் ஆறு 'மனிதர்கள்' இருந்தனர். அவர்களை மனிதர்கள் என்று அழைப்பதா அல்லது வேறு ஏதாவது பெயர் சொல்லி அழைப்பதா என என்னால் தீர்மானிக்க முடியவில்லை. அவ்வளவு தூரம் அவர்களது தோற்றம் இருந்தது. புதிய விருந்தாளியான என்னை, அங்கிருந்த அனைவரும் ஆச்சரியத்துடனும் ஒருவகை நேச பாவத்துடனும் நோக்கினர். என்னை வரவேற்று உட்கார வைக்கும் நோக்குடன், நெருக்கமான தமது இருப்பிடங்களில் சிறிது இடம் ஏற்படுத்தி நகர்ந்து இருந்துகொண்டனர். ஆனால் எனக்கு உடனடியாக இருக்கத் தோன்றவில்லை. நின்ற நிலையிலேயே அவர்களையும் அந்த அறையையும் நோட்டமிட்டேன்.

அவர்கள் எல்லோருடைய தலைமயிரும் சொல்லி வைத்ததுபோல, போல ஒரேமாதிரி நீண்டு வளர்ந்திருந்தது. சிலருடைய முடி புளியங்காய் கணக்கில் ஒன்றுடன் ஒன்று பின்னித் தொங்கியது. பல மாதங்களாகச் சவரத்தைக் கண்டிராத முகத்தில,; ஒரு அடி நீளத்துக்கு தாடி வளர்ந்திருந்தது. இடுப்பில் அழுக்கடைந்த சாரமோ அல்லது வேஸ்டியும், உடலில் அதேபோல அழுக்கடைந்த மேல் சட்டையும் காணப்பட்டன. அனைவரது கண்களும் குழிவிழுந்து, ஒளியிழந்து, நம்பிக்கை வரட்சியுடன் காணப்பட்டன.

அவர்களில் உயரமான ஒருவர் என்னைப் பார்த்து, "இதிலை இருங்கோ" என தனக்கருகில் ஒரு இடத்தைச் சுட்டிக்காட்டினார். அருகில் சென்ற பின்புதான் அவர்கள் அனைவரது உடலிலிருந்தும் வீசிய துர்நாற்றத்தை உணர முடிந்தது. இவ்வளவு காலமும் வெளிக்காற்றை சுவாசித்துவிட்டுச் சென்ற எனக்கு, அது அருவருப்பாகவும், குமட்டலை உண்டுபண்ணக் கூடியதாகவும் இருந்தது. அதேநேரத்தில், அவர்களை இந்த நரக வாழ்க்கையில் தள்ளிய புலிகளின் மேல் தீராத வெறுப்பும் ஆத்திரமும் ஏற்பட்டது.

நான் அமர்ந்த பின்னர் என்னை உட்காரச் சொன்னவர் என்னைப் பார்த்து, "உங்களை என்ன கேசிலை பிடிச்சவங்கள்?" என மெதுவாக வினவினார். அவருடைய கேள்விக்கு நான் என்ன பதில் சொல்லப்போகிறேன் என, அங்கிருந்த எல்லோரும் ஆவலுடன் அவதானித்தனர். அங்கிருந்த சிறிய ஜன்னலுக்கருகில் நின்றுகொண்டு வெளி உலகத்தையும், தூய்மையான காற்றையும் ரசித்துக் கொண்டிருந்த ஒருவனும் கூட, என் பதிலை அறியும் ஆவலுடன் அருகில் வந்து நின்றான். அந்த ஜன்னலுக்குள்ளால் பெரும் படையெடுப்புப் போல உள்ளே நுழைந்து கொண்டிருந்த நுளம்புக் கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்காக, இன்னொருவன் எழுந்து சென்று ஜன்னலை இழுத்து மூடினான்.

"என்ன பிரச்சனை எண்டு தெரியாது. ஏதோ விசாரிக்க வேணுமெண்டு கூட்டி வந்தவை" என நான் பதில் சொன்னேன்.

அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அந்தப் பார்வைகள், நான் உண்மையை மறைக்கிறேன் என்பதை அர்த்தப்படுத்தியதா அல்லது 'இதுவும் எங்கடை கேஸ் மாதிரித்தான்' என அவர்களுக்கு அசுவாரசியத்தை ஏற்படுத்தியதா எனத் தெரியவில்லை. எதுவானாலும், எனது பதில் அவர்களுக்கு எதுவித உற்சாகத்தையும் அளிக்கவில்லை என்று தெரிந்தது.

"நீங்கள் என்ன வேலை செய்யிறியள்?" என வேறொருவர் என்னிடம் கேட்டார்.

சில வேளைகளில் நான் செய்யும் வேலையை வைத்து ஏதாவது துப்புத் துலக்கலாம் என அவர் எண்ணினாரோ என்னவோ?

"நான் புத்தகக்கடை வைச்சிருக்கிறன்" என்று பதிலளித்தேன்.

"எது பூபாலசிங்கம் கடையோ?" என இன்னொருவர் அவசரமாக வினவினார். அவருக்கு பூபாலசிங்கம் புத்தகக் கடையைத் தெரிந்திருந்தது. ஆனால் அக்கடையின் ஒரு வாடிக்கையாளராக இருப்பார் போலத் தோன்றவில்லை.

"இல்லை, வேறை கடை" எனப் பதிலளித்தேன்.

"நீங்கள் வேறை இயக்கங்கள் எதிலையும் இருந்தனீங்களோ?" என மீண்டும் ஒரு கேள்வி என்னை நோக்கி வந்தது. இந்தக் கேள்வியைக் கேட்டவரின் தொனியில், 'ஏன் சுற்றிவளைப்பான், நேரேயே விசயத்துக்குப் போவோம்' என்ற ஒரு நெற்றியடித் தன்மை வெளிப்பட்டது.

"இல்லை" என்று மட்டும் சுருக்கமாகப் பதிலளித்தேன்.

அவர்கள் அதற்கு மேல் என்னிடம் எதுவும் கேட்கவில்லை. புலிகள் என்னை விசாரிப்பதற்கு முதல், அவர்கள் புலி உறுப்பினனின் எச்சரிக்கையையும் மீறி என்னிடம் மேற்கொண்ட 'பூர்வாங்க' விசாரணை, அத்துடன் முடிந்தது போல் தோன்றியது.

அதன் பின்னர் நான் அந்த அறையைச் சுற்றிலும் நோட்டமிட்டேன். ஒரு மூலையில் அலுமினியச் சட்டி ஒன்று இருந்தது. அதில் அரைவாசிக்கு மேல் சிறுநீர் நிறைந்திருந்தது. அவசர உபாதை வந்தால், அதற்குள்தான் கழிக்க வேண்டும் என்பது புரிந்தது. அறையின் சுவர் முழுவதும் ஒரே இரத்தக் கறைகளாக இருந்தது. நான் அதை உற்றுப் பார்த்ததை அவதானித்த ஒருவர், "பயப்பிடதையுங்கோ, அது வேறையொண்டுமில்லை. மூட்டைப்பூச்சி நசுக்கின அடையாளம். இஞ்சை மூட்டைப்பூச்சித் தொல்லையெண்டால் சொல்லேலாது" என்று சற்று நகைச்சுவை கலந்து விளக்கம் தந்தார்.

இதற்கிடையில் அவர்களில் இருவர், ஒரு அங்குல நீளம் வரையிலான ஒரு குறைச்சுருட்டை, அங்கிருந்த மண்ணெண்ணெய் கைவிளக்கில் பற்றவைக்க முயன்று கொண்டிருந்தனர்.

அதைக் கண்ணுற்ற இன்னொருவர், "டேய் உங்கடை வேலையாலை நாங்கள் எல்லாரும்தான் அடி வேண்ட வேண்டி வரும்" என எச்சரித்தார். ஆனால் அவர்களோ அவருடைய எச்சரிக்கையைப் பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

அதன் பின்னர் நான் என்னை முதலில் உட்கார அழைத்தவரிடம், "உங்களை என்ன பிரச்சனைக்காகப் பிடிச்சவையள்?" என சற்றுத் தயக்கத்துடன் வினவினேன்.

"உங்களை மாதிரித்தான். ஏதோ விசாரணை எண்டு கொண்டுவந்தாங்கள். ஆனா இண்டுவரையும் ஒரு விசாரணையும் நடக்கல்லை" என்று கூறிப் பெருமூச்சு விட்டார்.

டன் தொலைக்காட்சி தொடர்புகட்கு

தேனீ இணையத்தளத்தில் தோழர் மணியம் தொடரா எழுதும் புலிகளின் வதைமுகாம் அனுபவங்க

புலிகளின் வதை முகாம்களில் ஒன்றரை ஆண்டுகள் துன்புற்ற தோ மணியம் எழுதும் அனுபவத்தொடர்

யாழ்ப்பாணத்தில் சாதி அரசியல் செயற்படும் முல

அரசாங்கத்துக்கும் தமி தேசியக் கூட்டமைப்புக்கும் இடையேயான பேச்சு வார்த்தை சாதகமாக முன்னோக்கி நகர்கிறு - (1 )

அரசாங்கத்துக்கும் தமி தேசியக் கூட்டமைப்புக்கும் இடையேயான பேச்சு வார்த்தை சாதகமாக முன்னோக்கி நகர்கிறு - (2

"எவ்வளவு காலமாக இஞ்சை இருக்கிறியள்?" என நான் மீண்டும் வினவினேன்.

"ஏழு மாதங்கள்(!);" என்று சொன்ன அவர், "இஞ்சை இருக்கிற ஆட்களிலை நான் தான் குறைஞ்ச காலம். மற்ற எல்லாரும் ஒரு வருசத்துக்கு மேலை:" எனத் தெரிவித்தார்.

அதைக் கேட்டதும் எனக்கு முதற்தடவையாக மிகுந்த பயம் ஏற்பட்டது என்னையும் அவர்கள் விசாரணை எதுவுமில்லாமல், இந்த சிறிய நாற்றமெடுக்கும் அறைக்குள் வருடக்கணக்காக அடைத்து வைத்திருக்கப் போகிறார்களோ என்ற ஏக்கம் என்னை வாட்டியது. அதை நினைக்க, என் நெஞ்சுக்குள் பெரியதொரு பாறாங்கல்லை, யாரோ ஒருவர் திடீரென உருட்டிவிட்டது என்ற அதிர்ச்சி உணர்வு ஏற்பட்டது. துக்கம் தொண்டையை அடைத்தது. இங்கு அடைத்து வைத்திருபவர்களை, புலிகள் ஏன் பிடித்து வந்தார்கள் என்ற காரணத்தை, இன்றுவரை அவர்களுக்குச் சொல்லவில்லையென்றால், புலிகள் எதிர்காலத்தில் உருவாக்கப்போகும் 'தமிழீழ' அரசின் நீதி நிர்வாகம் எப்படி இருக்கும் என்பதை என்னால் எண்ணிப்பார்க்காமல் இருக்க முடியவில்லை.

முதற்தடவையாக, எனது தற்போதைய நிலையை, நானே இரண்டாம் ஆளாக எட்டிநின்று அவதானிப்பது போல எனக்குத் தோன்றியது. எனது சிந்தனைகள் ஒரு நிலைப்படாது தாறுமாறாக எகிறிப் பாய்ந்தன. நான் யார்? என்னை எதற்காகப் பிடித்து வந்திருக்கிறார்கள்? நான் செய்த குற்றம் என்ன? ஒரு விடுதலை இயக்கம் இப்படி மக்களை காரணமின்றிக் கைதுசெய்யும் சம்பவங்கள் ஏனைய நாடுகளிலும் நடந்துள்ளனவா? புல நாடுகளின் விடுதலைப் போராட்டங்கள் சம்பந்தமாக நான் படித்த ஏராளமான நூல்களில், அவையெல்லாம் திட்டமிட்டு மறைக்கப்பட்டிருந்தனவா? என்னுடைய எதிர்காலம் என்னவாகப் போகின்றது? நிர்க்கதிக்குள்ளாகப் போகும் எனது மனைவியும் குழந்தையும், அனாதரவாக மற்றவர்களிடம் கையேந்தி நிற்கப்போகிறார்களா? இப்படிப் பல கேள்விகள் என்னுடைய மனதில் ஒன்றன் பின் ஒன்றாக எழுந்து கொண்டே இருந்தன. கைதுசெய்யப்பட்ட ஒரு சில மணித்தியாலங்களுக்குள் எனது சிந்தனை இப்படிக் குழம்புகிறதென்றால், இங்கு வருடக்கணக்காக அடைத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் மனநிலை எப்படி இருக்கும் என எண்ணிப்பார்த்தேன்.

மனம் சோர்ந்த நிலையில் சுவரில் சாய்ந்தேன். சிந்தனை மட்டும் சாய்ந்துவிடாமல் அலைபாய்ந்து கொண்டே இருந்தது.
திடீரென எனது சிந்தனைச் சூழலில் இருந்து என்னை இழுத்தெடுப்பது போல, பல குரல்கள் ஒன்று சேர்ந்து பாடுவது போன்ற ஒரு ஒலி எழுந்தது. நான் காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டு அவதானித்தேன். இந்த ஒலி எங்கிருந்து வருகிறது? இங்கு இன்னும் பல மனிதர்கள் வேறு வேறு அறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கிறார்களா? போகப்போக அந்த ஒலி நமது மொழியிலானது அல்ல என்பது புரிந்தது. அப்படியானால்ஸ இப்பொழுது அது தெளிவாகக் கேட்டது. என்ன அது? தென்னிலங்கையில் பௌத்த விகாரைகளில் 'பிரித்' ஓதும் போது எழும், சிங்கள மொழியிலான ஒலி போலல்லவா அது இருக்கின்றது!

என்னுடைய முகத்தில் தோன்றிய உணர்ச்சிகளை அவதானித்த அந்த நெட்டை மனிதர், "என்ன சத்தம் எண்டு பாக்கிறியளோ?" என வினவினார்.

நான் 'ஓம்' என்பது போலத் தலையாட்டினேன்.

"அது இவங்கள் பிடிச்சு வைச்சிருக்கிற சிங்களப் பொலிஸ்காரங்கள் கும்பிடுற சத்தம். ஒவ்வொரு நாள் பின்னேரமும் அவங்கள் இப்படி ஓதுறது வழக்கம்" என விளக்கமளித்தார்.

இந்த புலி எம காதகர்களின் பிடியிலிருந்து தம்மை விடுவிக்கும்படி, போதி மாதவனிடம் அவர்கள் நெஞ்சுருகிக் கெஞ்சுகிறார்கள் என்பது புரிந்தது.

காலத்துக்குக் காலம் புலிகள் தம்மிடம் வகையாக அகப்படும் சிங்களப் பொலிசாரைப் பிடிப்பதும், பின்னர் அவர்களுக்கு என்ன நடந்தது எனத் தெரியாது அவர்களது உறவினர்கள் தவிப்பதும், தமிழ் பொதுமக்களுக்குக் கூட அவர்கள் என்ன ஆனார்கள் எனத் தெரியாமல் இருப்பதும், ஏற்கெனவே நான் அறிந்த சங்கதிகள்தான். ஆனால் இப்பொழுதுதான் அது பற்றிய ஒரு நேரடி அனுபவம் எனக்கு கிடைத்திருக்கிறது. (இது மற்றவர்களுக்கு கிடைக்காத, எனக்கு மட்டும் கிடைத்த ஒரு அபூர்வ சந்தர்ப்பம் அல்லவா!?) ஆனால் புலிகள் பிடித்த பொலிஸ்காரர்கள் அனைவரும் இங்கு வைக்கப்பட்டிருக்கிறார்களா அல்லது அவர்களில் சிலர் கொல்லப்பட்டுவிட்டார்களா என்பது எனக்குத் தெரியவில்லை. (ஆனால் அவர்கள் அனைவரும் ஒருவர்கூட பாக்கியில்லாமல், புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என, பின்னர் நான் அறிந்துகொண்டேன்)

இப்பொழுது என்ன நேரம் இருக்கும் என அறிய விரும்பினேன். ஆனால் அதற்கான வழியேதும் அங்கு இல்லை. அவர்கள் என்னைப் பிடித்த நேரத்தை வைத்துப் பார்க்கையில், குத்துமதிப்பாக இப்பொழுது இரவு எட்டு அல்லது எட்டரை மணி இருக்கும் எனத் தோன்றியது.

நேரம் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்திருக்கையில், திடீரென எமது அறைக்கதவு திறக்கப்படும் சத்தம் கேட்டது.

தொடரும்

தொடர் 1
தொடர் 2
தொடர் 3
தொடர் 4

தொடர் 5

முன்னைய பதிவுகள்